# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்
## ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG
## ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG

# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 48 - 2023*

### கல்வி – 01.12.2023 வெள்ளிக்கிழமை - 18:00 - 21:00 (18.55-19.25)

**முக்கிய அறிவிப்பு!**

இவ்வாரம் 02.12.2023 சனிக்கிழமை அன்று ஓசன் பாடசாலையில் சில திருத்த வேலைகள் செய்யவிருப்பதால் எமது பாடசாலையை நடாத்தமுடியாது என தகவல் கிடைத்துள்ளது. பதிலாக வெள்ளிக்கிழமை 01.12.2023 18:00 - 21:00 வரை நடாத்துவதாகத் தீர்மானித்துள்ளோம். அந்த வகையில் கற்பித்தல் நேரங்கள் பற்றிய தகவல் கீழே!

**01.12.2023 வெள்ளிக்கிழமை பாடசாலையின் கற்பித்தல் நேரவிபரம்:**

**பிரிவு 1**

தொடக்கநிலை - 7ஆம் வகுப்பு வரை

பாடசாலை நேரம்: 18:00 - 20:00

**பிரிவு 2**

8 - 10ஆம் வகுப்பு வரை

பாடசாலை நேரம்: 18:00 - 21:00

இரண்டு பிரிவுகளுக்கும் பொதுவான இடைவேளை நேரம் 18.55-19.25 வரை.

### கலைவகுப்புகள் -

கலைவகுப்புகள் வெள்ளிக்கிழமை இடம்பெறமாட்டாது. எப்போது எங்கே நடைபெறும் என்ற விபரத்தினை கலை ஆசிரியர்கள் நேரடியாக அவ்வகுப்பினூடாகத் தகவல் வழங்குவார்கள்.

### அரையாண்டுத் தேர்வு 2023.

**அரையாண்டுத் தேர்வு 2023 இற்கான எழுத்துத் தேர்வு 09.12.2023 நடைபெறும்.**

அதற்கான புலன்மொழித்தேர்வுகளை நடாத்தும் பணியிலும் இத் தேர்வுகளுக்கான தயார்படுத்தலிலும் ஆசிரியர்கள் ஈடுபட்டுக் கொண்டுள்ளனர். அனைத்துப் பெற்றோரும் ஆசிரியர்கள் தரும் தகவல்களுக்கு ஏற்றவாறு பிள்ளைகளைத் தயார்படுத்தவும்.

## நத்தார் விழா 2023

**அழைப்பிதழ், [இணைப்பை பார்க்கவும்.]**

நத்தார் விழா 16.12.2023 - இதற்குப் பொறுப்பானவர்கள் 1ஆம், 5ஆம் மற்றும் 6ஆம் வகுப்புப் பெற்றோர்கள். இவர்களுக்கான தகவல்கள் விரைவில் வகுப்புப் பிரதிநிதிகளினூடாக வழங்கப்படும்.

## மழலையர் முற்றம்

நாள் : ஞாயிற்றுக்கிழமை 03.12.2023

இடம் : Nedre Rommen 3, 0988 Olso

நேரம் : 13.00

**தேநீர்ச்சாலை -** இயங்குநிலையில் இருக்கும்.

***பெற்றோர் மற்றும் பாதுகாவலரின் முக்கிய கவனத்திற்கு!***

தாங்கள் தாங்கள் பயன்படுத்திய உணவுப்பொருட்கள் மற்றும் தேநீர்க் குவளைகள் அனைத்தையும் குப்பையிலிட்டு இடங்களைச் சுத்திகரித்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## தைப்பொங்கல் விழா 2024 (13.01.2024)

அன்னை பூபதி வளாகங்கள் மற்றும் தமிழர் வள ஆலோசனை மையத்தினர் இணைந்து நடாத்தும் தைப்பொங்கல் விழா 2023.
இடம் மற்றும் நேரவிபரம் பின்பு வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் விபரம்!

**லோறன்ஸ்கூக் வளாகம்: கூத்து (10-12 நிமிடம்) மற்றும் நடனவகுப்பு மாணவர்களின் நடனம் (5நிமிடம்).**

குறிப்பு:

கூத்து நிகழ்வில் பங்குகொள்ள விரும்பும் 5ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு மாணவர்கள் தங்கள் வகுப்பாசிரியர்களுடன் 02.12.2023 இற்கு முன் தொடர்புகொள்ளவும். கூத்து நிகழ்வுக்குத் தேவையான உடைகளுக்கான உதவிகள் செய்துதரப்படும்.

இணைந்த நிகழ்ச்சிக்குத் தேவையான மாணவர்கள் விபரம்.

*இன்னியம்:*

இன்னியத்திற்கு ஒவ்வொரு வளாகங்களிலிருந்தும் குறைந்தது 10 மாணவர்கள் தேவை. 5-10ஆம் வகுப்பு மாணவர்கள் இணைந்துகொள்ளலாம்.

*கோலாட்டம்:*
அனைத்து வளாகங்களிலும் 5ம் வகுப்பு மாணவர்கள் கோலாட்டத்தில் இணைந்து கொள்ளலாம். பெரும்பாலான மாணவர்கள் இணைந்துகொள்வது விரும்பத்தக்கது.

இன்னியம் மற்றும் கோலாட்டப் பயிற்சிகள் யாவும் தமிழர் வள ஆலோசனை மையத்தில் நடைபெறும்.

அன்னை பூபதி நடன ஆசிரியர்கள் அவர்களிற்கான பயிற்ச்சிகளை வழங்குவார்கள்.

தைப்பொங்கல் நாளிற்கு எமது வளாகம் சார்ந்த நிகழ்ச்சிகளையும் மாணவர்களையும் ஒழுங்குசெய்வதற்குப் புதிதாக நிர்வாகத்தில் இணைந்த ஒருவர் பொறுப்பாக வழிநடாத்துவார். தொடர்புவிபரம் 16.12.2023 இற்குப் பின் அறியத்தரப்படும்.

மிகவிரைவில் பயிற்சிகள் நடைபெறும் திகதிகள் அறியத்தரப்படும்.

## நிதி 2023

**வாரம் 45 முடிந்த கல்வியாண்டு 2022 - 2023 vår 2023 இற்குரிய கட்டணவிபரணங்கள் அனுப்பப்பட்டுள்ளது. கவனத்திற்கொண்டு வழங்கப்பட்டுள்ள முடிவுத் திகதிக்குள் /விரைவாகச் செலுத்தினால் நன்று.**

**நிலுவையிலுள்ள பழைய (høst 2022) கட்டணங்களை விரைவாகச் செலுத்தவும். செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.**

முடிந்த கல்வியாண்டு 2022 - 2023 கட்டண அறவீட்டுத் தகவல் இன்னும் கிடைக்காதவர்கள் நிதிப்பொறுப்பாளருடன் தொடர்புகொள்ளவும்.

இந்த கல்வியாண்டு 2023-2024 høst 2023 கட்டண விபரம் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

அன்னையினால் தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட்ட அங்கத்துவக் கட்டணத்தினை சிலர் இன்னும் செலுத்தவில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது. எனவே இதுவரை செலுத்தாமல் இருந்தால் அதனை விரைவில் செலுத்தும்படி வேண்டிக்கொள்கின்றோம். அக்கட்டணத்தினையும் செலுத்தியவர்கள் மட்டுமே முழுமையான உறுப்பினர் உரிமையைப் பெற்றவர்களாவர் என்பதனை அறியத்தருகின்றோம். ஐயப்பாடுகள் இருப்பின் நிதிப்பொறுப்பாளருடன் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.
jude@annai.no

**முக்கிய கவனம்!!**

1. *மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.*
2. *கற்பித்தல் நேரங்களில் கீழ்க்கட்டிடத்தினுள் எந்தப் பெற்றோரும் காத்திருப்பதற்கு ஒப்புதல் இல்லை.*
3. *பாடசாலையில் தீப்பிடித்ததற்கான அறிகுறியை அறிவிக்கும் அபாயமணி ஒலிக்கும்பட்சத்தில்* **(brannalarm)**, *அனைவரும் கட் டிடங்களிலிருந்து தாமதமெதுவுமின்றி வெளியேறவேண்டும். அனைவரும் அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி* **(brannbil, ambulanse osv)** *வாகனத்தரிப்பிடத்திலுள்ள கொடிக்கம்பத்தினருகே ஒன்றுகூடவேண்டும்.*

*வகுப்பிலுள்ள மாணவர்களை வெளியே கூட்டிவருவது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.*
*பெற்றோர்கள் வகுப்பறை நோக்கிச் செல்வதற்கு அனுமதியில்லை.*
*எப்பொழுதும் வாகனங்களை அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி* **(brannbil,politibil, ambulanse osv)** *நிற்பாட்டுதல் அவசியமென்பதை நினைவிற்கொள்க!*

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

நன்றி!

நிர்வாகம்
அன்னை பூபதி லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!